Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 116

வியாழக்கிழமை
21 மார்ச் 2024

பங்குனி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புறக்கணிப்பால்

## அந்தரிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 21
நாடளாவியரீதியில் மருந்தாளர்கள் நேற்றுத் திடீர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். சம்பள உயர்வு மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.
இந்தப் பணிப்புறக்கணிப்புக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, வவுனியா பொது மருத்துவமனை உள்ளிட்ட வடமாகாணத்தில் உள்ள நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவு, மாதாந்தச் சிகிச்சைக்கு வந்தோர் மருந்துகளைப் பெறமுடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.
"எனினும் நோயாளர்களுக்கு அரச ஒசுசல மருந்தகம் மூலம் மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் 11

பொருளாதாரப் பாதிப்பால்

## 32 மாணவர்கள் இடைவிலகல்!

கிளிநொச்சி மாவட்டத்திலேயே இந்தநிலை

கிளிநொச்சி, மார்ச் 21
கிளிநொச்சியில் குடும்பப் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 32 மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது. 10

## வடக்கு மக்களின் ஆதரவோடு சஜித்துக்கு 75 இலட்சம் வாக்குகள்!

ஐக்கிய மக்கள் சக்தியின் கனவு இது

கொழும்பு, மார்ச் 21
வடக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் இனவாதக் கட்சிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள். அவர்கள் இனவாதிகள் இல்லாத கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவார்கள். இதனால் ஜனாதிபதித் தேர்த 11



நச்சந்தி நாணி

"நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கிறது கண்டியளோ"

## தமிழ் எம்.பி.க்களின் செயற்பாடு தவறு!

வகுப்பெடுக்கின்றது பெரமுன

கொழும்பு, மார்ச் 21
வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் நடந்துகொண்டவிதம் தவறு. அதில் எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்றது கவலையளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே.
நாடாளுமன் 11

எம்.பி.க்கள் தெரிவில் வருகிறது மாற்றம்

# வாக்களிப்பில் 160 நியமனத்தில் 65



கொழும்பு, மார்ச் 21
தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, நியமன நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. 11

## அரிசிக் கொள்வனவில் ரூ. 50 லட்சம் 'அபேஸ்'

காலியில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அரிசி ஆலையில் இருந்து 50 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய அரிசி மூடைகளைப் பெற்று, பணம் கொடுக்காது மோசடி செய்த குற்றச்சாட்டில் கொழும்பு, காலியில் உள்ள மொத்த விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் 11

## நீதிமன்றை பொலிஸார் தவறாக வழிநடத்தினர்!

சட்டத்தரணி ஒருவர் வழக்குத்தாக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 21
காணி தொடர்பான வழக்கொன்றில் பொலிஸார் நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தி, நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் கீழ்மைப்படுத்துகின்றனர் என்று தெரிவித்து பிரபல சட்டத்தரணி ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 11

வட்டுக்கோட்டை இளைஞன் கொலை;

## சந்தேகநபர்கள் அடையாளம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வட்டுக்கோட்டையில் கடற்படைச் சோதனை முகாமுக்கு முன்பாக இளைஞன் ஒருவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, அடையாள அணிவகுப்பில் இரு 11



சேந்தாங்குளத்தில் துயரம்

## கடலில் மூழ்கி இருவர் மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 21
இளவாலை, சேந்தாங்குளம் கடலில் நீராடச் சென்ற இருவர், நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. 11

## கனடாவுக்கு அனுப்புவதாக 60 இலட்சம் ரூபா மோசடி!

பெண்ணொருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 21
கனடாவுக்கு அனுப்புவதாக ஆசைகாட்டி , 60 இலட்சம் ரூபா பணத்தினை மோசடி செய்த பெண்ணொருவர் யாழ்ப்பாணம், நிதி மோசடி பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஹங்குராங்கொட பகுதியைச் சேர்ந்த குறித்த மோசடிப்பெண், வெளிநாடு அனுப்புவதாக ஆசையூட்டி, யாழ். இளைஞர் ஒருவரிடம் 60 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றிருந்தார். ஆயினும் இளைஞரை 11

ஜனாதிபதித் தேர்தல்

## செப். / ஒக். 28/ 05

கொழும்பு, மார்ச் 21
ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 28 ஆம் திகதி அல்லது ஒக்ரோபர் 05 ஆம் திகதி நடத்தப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையில்லாத் தீர்மானம்

# சபாநாயகருக்கு எதிரான வாக்கெடுப்பு இன்று!

கொழும்பு, மார்ச் 21

சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்த்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.



நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் 19 ஆம் திகதி ஆரம்பமானது. முன்னதாக 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், எதிரணியின் கோரிக்கையின் பிரகாரம் விவாதத்துக்கு மேலும் ஒருநாள் ஒதுக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே இன்று வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுறுத்தல்களைப் புறந்தள்ளிய வகையிலேயே அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கொண்டுவந்துள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன. தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து, சபாநாயகரைக் காப்பாற்றுவதற்கு ஆளும் தரப்பும் பல்வேறுபட்ட வியூகங்களை வகுத்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அமைச்சர்கள் அவசரமாக நாடு திரும்பியுள்ளனர். வெளிநாடுகளுக்குப் பயணிக்கத் திட்டமிட்டிருந்த அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பயணத்தைப் பிற்போட்டுள்ளனர். (ம-44)

கோப் குழு விவகாரம்

## ரோஹிதவின் தலைமையை ஒருபோதும் ஏற்கவில்லை!

கொழும்பு, மார்ச் 21

ரோஹித அபேகுணவர்த்தன தலைமை வகிக்கும் கோப் குழுவில் பங்கேற்கமுடியாது என்று ஜே.வி.பி.யின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அநுர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோப் குழுவின் ஏழு உறுப்பினர்கள் பதவி விலகியிருந்த நிலையில், அந்தக் குழுவுக்குப் புதிதாக இணைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவும் நேற்றுப் பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கிராமக்கோட்டில் பெரும் தீப்பரவல்

### விரைந்து செயற்பட்டதால் பேரிடர்கள் தவிர்ப்பு

வடமராட்சி கிராமக்கோடு சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையமருகே உள்ள புலோலி மதுபானசாலை வளாகத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீப்பரவல் கடுமையான முயற்சிகளைத் தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டது. இதையடுத்து பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள புலோலி மதுபானசாலையில் நேற்று புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் ஏற்பட்ட தீப்பரவலின் போது புலோலி மதுபானசாலைக்கு பக்கவாட்டில் அமைந்திருந்த கொட்டகை மற்றும் முன்புறமாக அமைக்கப்பட்டிருந்த கடை என்பன முற்றாக எரிந்து நாசமாகின.

தீப்பரவல் ஏற்பட்ட சமயம் அப்பகுதி ஊடாகப் பயணித்துக் கொண்டிருந்த பருத்தித்துறை பிரதேசசபையின் தண்ணீர்த் தாங்கி மூலம் தீப்பரவல் சம்பவத்தைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தொடர்ந்தும் தீ பரவும் அபாயம் காணப்பட்டதால் யாழ்ப்பாணம் நகரசபை தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு காலை 7.45 மணியளவில் தீ முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்தால் பெட்டிக்கடை உரிமையாளருக்கு சுமார் 8 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் மதுபானசாலை கட்டடத்தின் வெளிப்புறம் இணைக்கப்பட்டிருந்த குளிரூட்டி மற்றும் கண்காணிப்புக் கமரா என்பனவும் தீயில் எரிந்து முற்றாக நாசமாகின. மதுபான நிலைய வளாகத்தில் குப்பைக்கு வைக்கப்பட்ட தீயே குறித்த விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. பருத்தித்துறை பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-100)

## சிவராத்திரி வழிபாட்டில் கைது ம.உ.ஆ. குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 21

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தன்று பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். (அ-20)

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞன் கைது!

17 வயதுடைய சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 23 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளான்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்றும் அவர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-20)

இந்திய மீனவர்களைக் கண்டித்து

## யாழ்ப்பாண மீனவர்கள் நேற்றும் உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி, யாழ்ப்பாணமாவட்ட மீனவர்கள் முன்னெடுத்துவரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாம் நாளாகத் தொடர்ந்தது.

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றுவரும் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் இரண்டாம் நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக வருகை தந்த மாதகல் மீனவர்கள், பேரணியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்பாகச் சென்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். பின்னர் மீனவர்கள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகைதந்து போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர். (ம-20)

## உடைமையில் கசிப்பு; பெண்ணொருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மானிப்பாய்ப் பொலிஸாரால் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் ஆனைக்கோட்டை பழம் வீதியைச் சேர்ந்த 45 வயதுடையவராவார். குறித்த பெண்ணிடமிருந்து ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன், அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-23)

சுகாதாரச் சீர்கேடு

## உணவகமொன்றுக்கு ரூ.2 இலட்சம் தண்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 21

நாவாந்துறைப் பகுதியில் பழுதடைந்த உணவுப்பொருள்களை விற்பனை செய்த உணவகத்துக்கு நீதிமன்றால் 2 இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.உதயபாலா தலைமையிலான சுகாதாரக் குழுவினர் அண்மையில் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போது குறித்த உணவகத்தில் பழுதடைந்த உணவுப் பொருள்கள், இறைச்சிக் கறி என்பவை மீட்கப்பட்டன.

அதனையடுத்து குறித்த உணவக உரிமையாளருக்கு எதிராக 20 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஒவ்வொரு குற்றத்துக்கும் 10 ஆயிரம் ரூபா வீதம் 20 குற்றச்சாட்டுகளுக்கும் இரண்டு இலட்சம் குற்றப்பணம் செலுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-17)

## 'வேள்வித் திருமகன்' நாடகம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

திருமறைக் கலாமன்றத்தின் வருடாந்த தவக்கால அரங்க ஆற்றுகையான 'வேள்வித் திருமகன்' யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் இன்று 21 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்கள் பி.ப 6.45 மணிக்கு, மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளார், திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தினை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் எழுதி வளர்த்து வந்துள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே 'வேள்வித் திருமகன்' என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் ஆலடியில் சட்டவிரோத மீன்சந்தை

## பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**காரைநகர், ஆலடி மீன்சந்தை சட்டவிரோதமாக தனியார் ஒருவரால் இயக்கப்படுகின்றது என்று காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

சபையின் முன்னாள் உறுப்பினர்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

காரைநகர்ப் பிரதேசசபையால் பல இலட்சம் ரூபா செலவில் சக்கலாவோடையில் அமைக்கப்பட்ட மீன் சந்தை பிரதேசசபையால் இயக்கப்படவில்லை. இந்தநிலையில் ஆலடி மீன் சந்தை சட்டவிரோதமாகத் தனியார் ஒருவரால் இயக்கப்படுகின்றது. அந்தக் காணி உரிமையாளருக்கு எதிராகப் பிரதேசசபை ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளபோதும், சட்டவிரோதமாக சந்தையை இயக்கும் நபருக்கு எதிராக எந்தச் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சபையின் முன்னாள் தவிசாளர், உறுப்பினர்கள் இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரையும், உள்ளூராட்சி ஆணையாளரையும் சந்தித்து கலந்துரையாடுவது என்றும், பிரதேசசபைக்கு வரவேண்டிய வருமானம் சட்டவிரோதமான முறையில் தனியாரால் வசூலிக்கப்படுவது தொடர்பாகச் சுட்டிக்காட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக சபையின் முன்னாள் தவிசாளர் உள்ளூராட்சி ஆணையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். பிரதேசசபையின் செயலரிடம் இது தொடர்பாக வினவப்படும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் பதில் வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-125)

### முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின்

# உடற்பயிற்சிப் பயிற்றுவிப்பாளரிடம் 2 கிராம் ஹெரோய்ன் போதை மீட்பு!

கொழும்பு, மார்ச் 21

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளரான முன்னாள் இராணுவ அதிகாரியின் இல்லத்திலிருந்து 2 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கண்டியிலுள்ள அவருடைய இல்லத்திலிருந்தே மேற்படி ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இராணுவ கொமாண்டோ படைப்பிரிவில் கடமையாற்றிய இவர் கோத்தாபய ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகிய பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

# வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 21

மானிப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பகுதியில் கடந்த 13ஆம் திகதி வீதியால் சென்ற பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றனர். இரண்டு பவுண் தங்கச் சங்கிலியே இவ்வாறு வழிப்பறி செய்யப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-23)

### சங்கிலி கொள்ளை:

# ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்ற ஆலய திருவிழாவின்போது தங்கச் சங்கிலியினைக் கொள்ளையிட்ட பெண்ணொருவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த வழக்கின் விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தன. சாட்சிகள் மூலம் குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து அந்தப் பெண்ணுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஓராண்டு சிறைத்தண்டனை நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு இரண்டு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டது. (ம-23)

# காலாவதியான பொருள்கள்; விற்றவர்களுக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

காலாவதியான பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இரு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

கோண்டாவில் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.ஜெகானந்தன் தலைமையில் பொதுச் சுகாதாரப் பயிலுநர்களான றொய்ஸ்ரன், லிங்கேஸ், சஜீவன், கோபிராஜ் ஆகியோர் கொண்ட குழுவால் வியாபார நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இரு பலசரக்குக் கடைகளில் காலாவதியான பொருள்களும், வண்டுடன் கூடிய உணவுப் பொருள்களும், சுட்டுத் துண்டு இன்றிய பொருள்களும் கைப்பற்றப்பட்டன. வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ-26)

# புதினம் தெரியுமோ?

**போட்டுக்குடுக்கிறது, காட்டிக்குடுக்கிறது எண்டால் எங்கட சனத்துக்குத் தனிக்கலை. சாப்பாடு, தண்ணி இல்லாமல் கூட இருந்திடுவினம். ஆனால் இப்பிடி அடுத்தவையைப் போட்டுக்குடுக்காமலோ, அவை செய்யிற வேலையளைக் காட்டிக்குடுக்காமலோ இருக்கமாட்டினம். இது சாதாரண ஆக்களில இருந்து அதிகாரியள் வரைக்கும் ஒரு தொற்று நோயா இன்னும் மாறாமல் இருக்கு.**

**இப்ப விசயத்துக்கு வருவம். இப்ப பள்ளிக்கூடங்களில விளையாட்டுப்போட்டியள் நடந்தது. வெக்கை எண்டதால சித்திரை வருசப்பிறப்புக்குப் பிறகுதான் விளையாட்டுப் போட்டியளை நடத்தச் சொல்லி ஓர்டர் வந்திட்டுது. அதால இனிச் சித்திரைக்குப் பிறகுதான் மிச்சப் பள்ளிக்கூடங்கள் விளையாட்டுப் போட்டியளை வைக்கலாம். இது வரைக்கும் வடக்கில நடந்த விளையாட்டுப் போட்டியளில, சிலவிசயங்கள் எல்லாரின்ர கண்ணையும் ஒருக்கா திரும்பிப் பாக்க வைச்சது. வெடுக்குநாறிமலை, பஸ் அக்சிடெண்ட், டாங்கி, மாவீரர் துயிலுமில்லம், சிவபெருமானைப் பிடிச்சு இழுக்கிற பிக்கு எண்டு இப்பத்தைச் சூழ்நிலையைச் சொல்றமாதிரி சில பள்ளிக்கூடங்களில இல்லங்களை அலங்கரிச்சதும், விநோத உடைப்போட்டிக்கு வேசம் போட்டதும் எல்லாருக்கும் பிடிச்சிருந்தது. அதோட இப்ப இருக்கிற இறுக்கமான நிலையில எங்களுக்கு கிடைச்ச ஒரு வழியைப் பாவிச்சு, எங்கட பிரச்சினையை வெளிப்படுத்தின துணிச்சலையும், கற்பனைச் சக்தியையும் கனபேர் பாராட்டினவை. ஆனால் அதுக்கும் இப்ப ஆப்பு வைச்சிருக்கினம் அதிகாரிமார்.**

**மூண்டு நாளுக்கு முதல் ஒரு சூம் மீட்டிங் நடந்திருக்குது. வடக்கு மாகாணக் கல்விக்குப் பொறுப்பான அதிகாரிதான் இந்த சூம் மீட்டிங்குக்கு ஏற்பாடு. அதில பள்ளிக்கூட அதிபர்மாரும், கல்வித் திணைக்கள அதிகாரிமாரும் கலந்துகொண்டவை. இப்பிடி பள்ளிக்கூடத்தில வெடுக்குநாறிமலை விசயங்கள், சீ.ரி.பி.க்காரரை அவமானப்படுத்திற விசயங்கள் எல்லாம் விநோத உடைப்போட்டி, இல்லங்களைச் சோடிக்கிறதில காட்டுப்பட்டிருக்கு. இதால எங்களுக்கு மேலிடத்தில இருந்து கடும் பிரஷர். இப்பிடியெல்லாம் இனிமேல் எந்தப் பள்ளிக்கூடத்திலையும் அரசியல் கருத்துப்பட சோடிக்கக்கூடாது. அதோட வெளிநாட்டில இருந்து ரூரிஸ்ட் விசாவில இலங்கைக்கு வாற ஆக்களை விருந்தினராகவும் கூப்பிடக்கூடாது. ஆரெல்லாம் விருந்தினரா வருகினம், விநோத உடைப்போட்டியில ஆர் என்ன வேசம் போடப்போகினம், இல்லங்களை எப்பிடிச் சோடிக்கப் போறீங்கள் எண்டதுகளை முதலே எங்களுக்கு அறிவிச்சு, அனுமதி எடுக்க வேணும். அப்பிடி அனுமதி எடுக்காமல் செய்தால் அதுக்கு என்ன நடவடிக்கை எடுக்கோணுமோ அதை உடன எடுப்பம். எண்டு வடக்குக் கல்விக்குப் பொறுப்பா இருக்கிறவர் வாய்மொழி 'ஓர்டர்கள்' போட்டிருக்கிறாராம். கிட்டத்தட்ட இது ஒரு தணிக்கைதான். இனிமேல் எங்கட இனத்தின்ர அடையாளங்களை விளையாட்டுப்போட்டியளில காணேலாதபடிதான் இப்பிடியான வேலையைச் செய்திருக்கினம்.**

**சிங்களவங்கள் எங்களை வைச்சு செய்யிறாங்களோ இல்லையோ, எங்கட அதிகாரிமார் எங்கட இனத்தை நல்லா வைச்சு செய்யினம் பாருங்கோ.**

-பட்சி


padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோகசுவாமிகள்

## காலத்தில் நிலைத்த ஈழத்துச் சித்தர்!

■ நந்தன்



**சிவயோகசுவாமிகளின் 60 ஆவது குருபூசைதினம் இன்றாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

காலத்தில் அழியாத சித்தர்கள் வரிசையில் எமது ஈழத்துச் சித்தர் சிவயோகர்சுவாமிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர். அவரின் குருபூசை தினம் இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் தமிழ் மக்கள் பரந்துவாழும் பிரதேசங்களிலும் சிறப்பாகவே கடைப்பிடிக்கப் பட்டு வருகின் றது.

1872ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29 ஆம் திகதி பிறந்த சித்தரின் இன்னுயிர், 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதியன்று இறையோடு இரண்டறக் கலந்தது.

யோகர்சுவாமிகளுக்கு அவரின் குரு செல்லப்பா சுவாமி போல் ஊர் சுற்றுவதில் நாட்டம் அதிகம். அடிகள் கால்படாத தெருவே யாழ்ப்பாணத்தில் இல்லை. வெள்ளை வேட்டியும் தோளில் ஒரு துண்டைப் போட்டுக்கொண்டும் குடையோடு சுட்டெரிக்கும் வெயிலில் வெறும்காலுடன் அவர் செல்லும் காட்சி ஆண்டுகள் பல உருண்டோடியும் கண்களில் நிறைந்து நிற்கும் காட்சியாகும்.

சிவயோகர்சுவாமிகள் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் கொழும்புத்துறையிலேயே அவர் அதிக காலம் வாழ்ந்து வந்தார். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நின்ற இலுப்பை மரத்தடியில் அவரின் வாழ்க்கை ஆரம்பமானது. காலப்போக்கில் யோகர் சுவாமிகள் ஆன்மீக வளர்ச்சி பெற்றபோது, செல்லப்பா சுவாமிகள் நான்கு மகா வாக்கியங்களை ஓதி அவரின் ஆன்மீகப் பயணத்தை ஆரம்பித்து வைத்தார். 'ஒரு பொல்லாப்பும் இல்லை', 'எப்பவோ முடிந்த காரியம்', 'நாம் அறியோம்', 'முழுவதும் உண்மை' என்பனவே அந்த வாக்கியங்களாக அமைந்தன. இந்த அற்புதினமான இரண்டாம் பங்குனித் திங்களை யோகரின் திருவடி பூசையாக பக்தர்கள் அனுஷ்டித்து வருகின்றனர்.

செல்லப்பா சுவாமிகளின் வழிகாட்டலில் யோகர் சுவாமிகள் நல்லூர் தேரடியில் நாற்பது நாள்கள் தொடர் தியானத்தில் உச்சி வெயிலையும் பொருட்படுத்தாது இருந்தார். இந்த நாற்பது நாள்கள் தியானத்தின் பின்னர் கதிர்காமத்தை நோக்கிப் பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்தார். இந்த நீண்ட பாதயாத்திரையில் கதிர்காமத்தை அடைந்த யோகர்சுவாமிகள் ஆலய தரிசனம் செய்தார். கதிர்காமமலை உச்சியிலும் ஆழ்ந்த தியானத்திலும் ஈடுபட்டார். பாதயாத்திரையை முடித்துக்கொண்டு மீண்டும் கொழும்புத்துறையை வந்தடைந்த யோகர்சுவாமிகள் இலுப்பை மரத்தடியில் தனது ஆன்மீக வாழ்க்கையை ஆரம்பித்தார். அப்போது செல்லப்பா சுவாமிகளும் யோகர்சுவாமியை சந்தித்துச் சென்றார். யோகர்சுவாமிகள் இந்த இலுப்பை மரத்தடியில் 1914ஆம் ஆண்டு வரைக்கும் இருந்து தியானத்திலும் வழிபாட்டிலும் ஈடுபட்டு வந்தார். அப்போது யோகரின் குருவான செல்லப்பா சுவாமிகளும் அடிக்கடி அவரை வந்து சந்தித்து ஆசீர்வதித்து தன்னைப் போன்று பைத்தியகாரனாகச் செயற்படவேண்டாம் என்று கூறிவிட்டு செல்வார். யோகர்சுவாமிகளின் தொண்டு சிவதொண்டு. எனவேதான் 'சிவதொண்டன்' இதழ் 1935ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப் பட்டது. அப்போது சிவதொண்டன் ஆசிரியராக முதலில் விளங்கியவர் வித்துவான் க.கி.நடராசா.

சிவயோகர் சுவாமிகள் நினைவாக கட்டப்பட்ட சமாதிக்கோயில் இப்போதும் கொழும்புத்துறையில் அருட்காட்சி கொடுத்தவண்ணம் உள்ளது. கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய பூந்தோட்டத்தில் இவரின் திருவடி கோயிலும் கம்பீரத் தோற்றம் பெற்றுக் காணப்படுகின்றது. அத்துடன் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு முன்பாக யோகர் சுவாமி இருந்து தியானம் செய்ததால் வித்தியாலய வளாகத்திலும் சிவயோகனின் நினைவாக திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு அங்கே அவர் நினைவாக பல்வேறு நிகழ்வுகளும் வருடா வருடம் நடத்தப்பட்டு வருகின்றன.

சிவயோகர்சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகளில் பல்வேறு நாடுகளில் இருந்தும் அடியவர்கள் கலந்துகொண்டு அவரின் திருவருளைப் பெற்று வருகின்றனர். 1964ஆம் ஆண்டு ஆயிலியம் நாளில் சுவாமி மகாசமாதியடைந்தார். சமாதி அடைந்த இடத்தில் அதாவது கொழும்புத்துறையில் சமாதி கோயில் திருநாவுக்கரசு குடும்பத்தினரால் அமைக்கப்பட்டு இந்தக் கோயில் தற்போது அவர்களால் பராமரிக்கப்பட்டும் வருகின்றது. அத்துடன் சுவாமியின் திருவுடல் தகனம் செய்யப்பட்ட துண்டி இந்து மயானத்திலும் அவரின் நினைவாக நினைவுச் சின்னம் உருவாக்கப் பட்டு தற்போதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் காலத்தில் நிலைத்த ஈழத்துச் சித்தர்களில் சிவயோகர்சுவாமிகளும் ஒருவர் என்றால் அது மிகையில்லை. ■

## தெய்வீகப் பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 21

கோப்பாய் அருள்மிகு வைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள நிலையில், எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. உற்சவ காலங்களில் தினமும் 7 மணிமுதல் 8 மணிவரை தெய்வீகப் பேருரையை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் ஆற்றி வருகின்றார். (ச)

## குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 21

யோகர் சுவாமிகளின் குரு பூசை தின நிகழ்வு, சிவ தொண்டன் நிலையத்துப் புராணமண்டபத்தில் இன்று மு.ப. 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ப)

✦✦✦✦

தவத்திரு யோகர் சுவாமிகளின் 60 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வு, கொழும்புத்துறையிலுள்ள சுவாமிகளின் சமாதிக் கோவிலில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (மு-66)

## விளையாட்டுப் போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். மாவட்ட பாடசாலைகள் ஒழுங்கமைக்கப்பட்ட மெய்வன்மை விளையாட்டுப் போட்டிகளை திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைத்துள்ளன.

கடும் வெப்பம், வறட்சி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மாணவர்களை பாதுகாக்கும் முகமாக விளையாட்டுப் போட்டிகளை இடைநிறுத்துமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியமைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-17)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 21

கருகம்பனை தமிழ் மன்றம் சமூக நிலையம் நடத்தும் 23ஆவது குருதிக்கொடை முகாம் கருகம்பனை கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடத்தப்படவுள்ளது. முகாமில் குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக் கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். காரியம் அனுகூலமாக முடியும். அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணிச்சுமை அதிகரிப்பதால் சற்றுச் சோர்வு உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடியுங்கள்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நல்ல நாள். மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிணக்குகள் நீங்கும். பண வரவு சுமாராக இருக்கும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்வார்கள். இலாபம் கிடைக்கும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படலாம். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். துணிச்சலுடன் முடிவு எடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிரிகளால் இடையூறுகள் மறையும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்பட வேண்டிய நாள். உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் சச்சரவுகள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். ஆதாயம் கிடைக்கும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## மடியில் கனம், வழியில் பயம்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான 'கோப்' குழுவின் தலைமைப் பதவிக்கு பெரமுனவின் முக்கியஸ்தரான ரோஹித அபேகுணவர்த்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவிலிருந்து பதவி விலகியுள்ளனர். எந்த நோக்கத்துக்காக 'கோப்' குழு அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் ரோஹித அபேகுணவர்த்தனவின் தலைமையின் கீழ் சாத்தியப்படப் போவதில்லை என்பதே, 'கோப்' குழுவில் இருந்து விலகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொல்லும் ஒற்றைக் காரணமாக அமைந்துள்ளது.

பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட அமைப்புகளின் கணக்குகளை, கணக்காய்வாளர் நாயகத்தின் உதவியுடன் பரிசீலனை செய்வது அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) பிரதான கடமையாகக் காணப்படுகின்றது. இது தொடர்பான அறிக்கையிடல்களை 'கோப்'குழு காலத்துக்குக் காலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும். எனினும், 'குற்றத்தரப்பு' என்று அடையாளப்படுத்தும் கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மீதான அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் அதிகாரம்'கோப்' குழுவுக்கு வழங்கப்படவில்லை.

அரச நிறுவனங்களின் மோசடி தொடர்பாக ஆராயும் குழுவுக்கு, ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவதானது எவ்வாறு குற்றத்தரப்பை அடையாளம்காண உதவும்? ஆதலால், 'கோப்' குழுவின் தலைமைப் பதவி உள்ளிட்ட அதிகாரக் கதிரைகள் எதிர்க்கட்சிக்கே வழங்கப்பட வேண்டும் என்பதே நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்க்கட்சிகள் இணைந்து முன்வைக்கும் கூட்டுக்கோரிக்கையாக அமைந்திருக்கின்றது. இவ்வாறிருக்கையில், கோப் குழுவின் தலைமைப் பதவி ரோஹித அபேகுணவர்த்தனவுக்கு வழங்கப்பட்டமையானது, தேர்தல் காலத்தில் கோப் குழுவின் மூலம் ஆளும் பெரமுனவின் மோசடிகள் வெளிவராமல் தடுப்பதற்கான உத்தி என்பதே இப்போது நாடாளுமன்றத்தில் பரவலாக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு.

குற்றமிழைக்கும் தரப்பே நீதியைத் தேடுவதென்பது இலங்கைக்குப் புதிதல்ல. இலங்கையில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் போர்க் குற்றங்கள், பொருளாதார நெருக்கடிகள் என அனைத்திலும் இந்தச் சாபக்கேடானதும் பிற்போக்குத்தனமானதுமான போக்குத்தான் இந்த நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரச் சிதில நிலைக்குப் பிரதான காரணம். ஆதலால், திருடன் கையில் திணிக்கப்பட்ட சாவியாக, ஆளும் தரப்பிடமே அதிகாரத்தைக் கொடுக்கும் 'மந்த சிந்தனையை' கைவிட்டு, 'மிஸ்டர் க்ளீன்' என்று அறியப்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சியில் இருந்து பொருத்தமான ஒருவரை 'கோப்' குழுவின் தலைமைப் பதவிக்கு நியமிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயமிருக்கும்!




# கோப் தலைமையிலிருந்து ரோஹித விலகவேண்டும்!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 21**

**கோப் குழுவின் தலைமைப்பதவியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன பதவிவிலக வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

கோப் குழுவின் தலைமைப்பதவிக்கு ரோஹித அபேகுணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகி யுள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, அபேகுணவர்த்தன தலைமைப் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. 'கோப் குழு உறுப்பினர்கள் தொடர்ச்சியாகப் பதவி விலகிவரும் நிலையில், தனது தகுதிநிலையை உணர்ந்து ரோஹித அபேகுணவர்த்தன செயற்படவேண்டும்' என்று ஐக்கிய மக்கள் சக்தி மேலும் தெரிவித்துள்ளது. (ம-44)

## செயற்கை நுண்ணறிவு மாணவருக்குப் போதிப்பு

செயற்கை நுண்ணறிவை மாணவர்களுக்குப் போதிக்கும் பரீட்சார்த்தத் திட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 20 பாடசாலைகளில் நேற்றுமுன்தினம் தொடக்கம் இந்தத் திட்டம் பரீட்சார்த்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வெற்றி பெறும் பட்சத்தில் தரம் எட்டு முதல் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொடர்பான கல்வி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

## எதிர்க்கட்சித் தலைமையை பறிப்பதற்குத் திட்டமில்லை



### பஸில் வெளிப்படைப் பேச்சு

கொழும்பு, மார்ச் 21

எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்கு பெரமுன எந்தவொரு வியூகத்தையும் வகுக்கவில்லை என்று பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ச தலைமையிலான பெரமுனவினர் சிலர் எதிரணிக்குச் சென்று எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்கு வியூகம் வகுத்துள்ளனர் என்று வெளிவரும் தகவல்கள் தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-44)

## ரூபே பாவனைக்கு தொடர் தடங்கல்!

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பொதுவான நாணயப் பரிமாற்ற அட்டையாக அறிமுகம் செய்யப்படவிருந்த 'ரூபே' அட்டையை பாவனைக்கு விடுவதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இரு நாட்டு வங்கிகளுக்குமிடையே கட்டணங்கள், தரகுப்பணம் போன்ற விடயங்களில் உடன்பாடு எட்டப்படாமையே தாமதத்துக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-6)

## வெப்பநிலை உச்சம் 2 லீற்றர் நீர் அருந்துக!

அதிகரித்த வெப்பம் காரணமாக உடலிலுள்ள செல்கள் செயலிழக்கும் அபாயம் ஏற்படும். ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு லீற்றர் தண்ணீர் அருந்துவது அவசியமாகும் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சக மருத்துவ நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவிக்கையில்,

கடந்த வருடம் இருந்த வெப்பநிலையை விட இந்த ஆண்டு வெப்பநிலை அதிகரித்துள்ளது. எனவே நீரிழப்பை தவிர்த்து உடலின் செல்களைப் பாதுகாக்கத் தேவையான அளவில் நீரைப் பருகவேண்டும் - என்றார். (ச-இ)

### நாளை

22.03.2024
வெள்ளிக்கிழமை
பங்குனி–9

சுபநேரம் : 06.16 - 07.46
ராகுகாலம் : 10.46 - 12.16

### நாளொரு நல்வார்த்தை

உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம். ஆனால், உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.

— சார்லி சப்ளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பதார்த்த சூடாமணி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வலி. மேற்குப் பிரதேச செயலகமும், பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்புச்சபையும் இணைந்து நடத்தும் மருத்துவர் நா. கணேசலிங்கநாதன் உரையெழுதிய 'பதார்த்த சூடாமணி' நூல் வெளியீடு வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் திருமதி கி.செந்தூரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச செயலர் கவிதா உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் மருத்துவர்.ஜெ. கனகேஸ்வரி, கைதடி சித்த போதனா வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர் சி.துரைரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை மருத்துவர் கு .ஸ்ரீகணநாதன், நூலாய்வுரையை மூத்த எழுத்தாளரும் சித்த மருத்துவருமான வெற்றிவேல் சக்திவேல் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச-இ)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் சர்வதேச இந்து மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம் நடத்தும் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

'இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்' எனும் தொனிப்பொருளில் இந்துக் கற்கைகள் பீடாதிபதி ச.பத்மநாபன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

## நீர் தினத்தையொட்டி நாளை கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் கழகத்தால் உலக நீர் தினத்தை முன்னிட்டு 'நீருக்கான யுத்தம் நீண்ட தூரத்தில் இல்லை' எனும் தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட அரங்கில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

புவியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி நா.பிரதீபராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் எஸ்.சர்வராஜா சிறப்புப் பேச்சாளராக பங்கேற்கவுள்ளார். (ச)

# ஊடகவியலாளர்களை தாக்கிய இஸ்ரேல் படை

லண்டன், மார்ச் 21

**காஸாவில் அல் - ஜெசீரா ஊடகவியலாளரைக் கைதுசெய்த இஸ்ரேலியப் படையினர் 12 மணி நேரத்தின் பின்னர் அவரை விடுதலை செய்துள்ளனர் என்றும், காஸாவின் அல்ஸிபா மருத்துவமனையில் ஊடகவியலாளரைக் கைதுசெய்த இஸ்ரேலியப் படையினர் அவரைக் கடுமையாகத் தாக்கினர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.**

அல்ஸிபாமருத்துவமனையை இலக்குவைத்து நான்காவது தடவையாக இஸ்ரேல் மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பாகச் செய்தி சேகரிப்பதற்காக சக ஊடகவியலாளர்களுடன் அல்-ஜெசீராவின் செய்தியாளரும் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார்.

அல்-ஜெசீராவின் செய்தியாளரை இஸ்ரேலியப் படையினர் இழுத்துச்சென்றனர், அவரது ஊடக உபகரணங்களை அழித்தனர் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊடகவியலாளர்களுக்கான அறையில் குழுமிய ஏனைய ஊடகவியலாளர்களையும் கைதுசெய்தனர் என்றும், ஊடகவியலாளர்களின் கண்கள், கைகளைக் கட்டிய இஸ்ரேலியப் படையினர் அவர்களை நிர்வாணமாக்கித் தாக்கினார்கள் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று கூறப்படும் நிலையில், இந்தச் சம்பவத்துக்கு சர்வதேச மட்டத்தில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. (ஏ-இ)



## உலக அழகியாக 'செக்' பெண்

2024ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் பட்டத்தை செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த 24 வயதான கிறிஸ்டினா பிஸ்கோவா என்ற பெண் வென்றுள்ளார்.

71 ஆவது உலக அழகிப் போட்டி மும்பையில் உள்ள ஜியோ கன்வென்ஷன் மையத்தில் நடைபெற்றது. 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நடக்கும் உலக அழகிப் போட்டி இதுவாகும்.

இந்தப் போட்டியில் செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா என்ற பெண் உலக அழகியாக அறிவிக்கப்பட்டார். இவர் 115 நாடுகளைச் சேர்ந்த அழகிகளை எதிர்த்துப் போட்டியிட்டார். கடந்த ஆண்டு உலக அழகிப் பட்டம் வென்ற போலந்து நாட்டைச் சேர்ந்த கரோ லினா பிலாவ்ஸ்கா கிறிஸ்டினாவுக்கு மகுடம் சூட்டிக் கௌரவித்தார். (ச-இ)

## காஸாவில் பட்டினி

கொழும்பு, மார்ச் 21

காஸாவின் சில பகுதிகளில் கடுமையான உணவுப் பற்றாக்குறை நிலவுகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. வடக்கு காஸாவில் வாழும் 70 சதவீதமான மக்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படு கின்றது.

காஸாவில் உடனடிப் போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகும் என்றும், பல மரணங்கள் ஏற்படக்கூடிய அபாய நிலைமை உள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவுப் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## மருத்துவமனை முற்றுகை
# போர் நிறுத்தத்தை இஸ்ரேல் குழப்புகிறது

ஜெருசலேம், மார்ச் 21

காஸாவின் மிகப்பெரும் மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனையை முற்றுகையிட்டுத் தாக்குவதன் மூலம் இஸ்ரேல் போர்நிறுத்தப் பேச்சுகளைக் குலைக்கின்றது என்று ஹமாஸ் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

காஸாவில் உள்ள மிகப்பெரும் மருத்துவமனையும், ஊடகவியலாளர்களின் கேந்திரப் பகுதியாகவும் தற்போதுவரை திகழும் அல் ஷிபா மருத்துவமனையை கடந்த மூன்று நாள்களாக இஸ்ரேல் முற்றுகையிட்டுத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதையொரு போர்க்குற்றம் என்று உலக நாடுகள் கண்டித்துள்ளதுடன், மருத்துவமனை வளாகத்தில் இருந்து இஸ்ரேலியப் படைகள் உடன் வெளியேறவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றன. எனினும் இந்த அழுத்தங்களுக்குப் பணிவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள இஸ்ரேல், துல்லியமான உளவுத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் மருத்துவமனையில் நோயாளர்களை விடவும் ஹமாஸின் தலைவர்களே அதிகமுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே அல் ஷிபா மருத்துவமனையை முற்றுகையிட்டுத் தாக்குவதன் மூலம் இஸ்ரேல் போர்நிறுத்தப் பேச்சுகளை குலைக்கின்றது என்று ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹானியே குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

## பன்னீர்செல்வத்துக்கு மன்று நிரந்தரத் தடை



சென்னை, மார்ச் 21

அ.தி.மு.கட்சியின் கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்துக்குத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கட்சியின் பெயர், கொடி, சின்னம், கடிதத் தலைப்புப் போன்றவற்றைப் பயன்படுத்தத் தடைவிதிக்கக் கோரி கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

மனு மீதான விசாரணை நீதிபதி என்.சதீஷ் குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அனைத்துத் தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் வழக்கின் தீர்ப்பை நீதிபதி திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தார்.

கடந்த திங்கட்கிழமை சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியது. கட்சியின் சின்னம், பெயர், கொடி உள்ளிட்டவற்றைப் பயன்படுத்த ஓ.பன்னீர்ச்செல்வத்துக்கு விதித்த நிரந்தரத் தடையை நீதிமன்றம் உறுதி செய்தது. (ஏ-இ)

## தேசத்துரோகத்துக்கு ஆயுளுக்கும் சிறை!

ஹொங்கொங், மார்ச் 21

தேசத்துரோகத்துக்கு இனி ஆயுள்சிறைத்தண்டனை விதிக்கும் வகையில், ஹொங்கொங் நாடாளுமன்றத்தில் சட்டமியற்றப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலம் ஹொங்கொங் நாடாளுமன்றத்தில் நேற்றுமுந்தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் நேற்றையதினம் அது சட்டமாக்கப்பட்டுள்ளது.

சீனாவின் அச்சுறுத்தல்கள் அனுதினம் ஹொங்கொங்குக்கு நெருக்கடியாக மாறியுள்ள நிலையில் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டம், நாட்டின் வரலாற்றில் சிறந்த தருணம் என்று ஹொங்கொங் ஜனாதிபதி ஜோன் லீ தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலயத்தில்
பின்வரும் பதவி நிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

**1. இலிகிதர் 2. களஞ்சியப் பொறுப்பாளர்**

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை 26.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக **தலைவர், அறங்காவல் சபை, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில், துன்னாலை வடக்கு, புலோலி** எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறியத்தரப்படும்

**நா.விஷ்ணுகாந்தன்**
**முகாமை அறங்காவலர்**
**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.**

T.P.:- 077 767 2188

## வேலைக்கு ஆட்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் புதிதாக அமையவுள்ள உணவகம் ஒன்றுக்கு யாழ்ப்பாண பாரம்பரிய உணவுகள் மற்றும் Pizza, Chinese உணவு வகைகள், கொத்து ரொட்டி போன்றவற்றை தயாரிப்பவர்களும் , சமையல் உதவியாளர்களும் தேவை.**

(CS/28308) J-1

**072 607 2557, 076 174 4630**

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்துக்கான பொதுக்கூட்டம் தாவடி இல. 9, நந்தாவில் வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளன அலுவலகத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப)

# விலகும் எம்.பி.க்கள் கலையுமா "கோப்"?

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்கவும் பொது நிறுவனங்கள் தொடர்பான குழு அல்லது கோப்குழுவின் உறுப்புரிமையில் இருந்து விலகியுள்ளார்.

கோப்குழுவின் 30 பேரில் இருந்து இது வரை பத்து பேர் விலகியுள்ளனர். கோப் குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன நியமிக்கப்பட்டதை அடுத்தே இவர்கள் பதவி விலகியுள்ளனர். இதனால் கோப் குழு கலைக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது. (எ-44)

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் மாணிக்கம்



**தோற்றம்** **04.12.1937** — **மறைவு** **19.03.2024**

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு நாவற்கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் மாணிக்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (19.03.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், இரஞ்சினி, இரவீந்திரன், சிறீதரன், மனோகரன், நிருபாசினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாதசுந்தரம், இராஜிமதி, ஹேமசீலி, குலேந்திரமாலா, தனராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சபாபதி, சின்னத்தங்கம், அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், மயூரன், தினேசன் - கார்த்திகா, மாதங்கி - ஜெயகாந், பிருந்தினி - கவிபரன், டிஷாந் - நிவாசினி, கிரிஷாந், பவித்திரன், வித்தாரன், அக்சயா, வினோத், விஜித், ஜனனி, வர்சனா, விஷ்மிதா, வினுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கஜீபனா, கஷ்விகா, கனிஷ்கா, காஷ்மியா, நேத்திரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தினேசன் - 077 124 0074** (CS,28322) S-1 **தகவல்: குடும்பத்தினர்.**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர் - பஞ்சரட்ணம் அருட்செல்வன் பெண் அஜிதா**
**முகவரி - சீந்திப்பந்தல், இளவாலை,**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01, போயிட்டி மாரீசன் 3வது வலது ஒழுங்கை, இலக்கம் 22 சொந்தக்காரர் உ.கோ. செபஸ்தியாம்பிள்ளை சாம்சன்வென்னி என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது 2021ஆம் ஆண்டு யூலை மாதம் 14ம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் சா.கஸ்தூரி முகதாவில் 214ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி பஞ்சரட்ணம் அருட்செல்வன் பெண் அஜிதா என்பவர்களை வந்தடைந்தது.

**ஆதன விபரம்.**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று சிறுவிளான் இறை "தறிச்சடைப்புலோ" நிலப்பரப்பு 1குளி 11.28 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ். பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2018/75/17.03.2018 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு -01 துண்டு ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

- **கிழக்கு** - மயில்வாகனம் விஜயசுந்தரத்திற்குரிய ஆதனமும்
- **வடக்கு** - எமது ஆதனத்தால் விடப்பட்ட பாதை நிலமும் அதற்கப்பால் விசுவலிங்கம் குகதாசனிற்குரிய ஆதனமும்
- **மேற்கு** - வெள்ளவாய்க்காலும் ஒழுங்கையும்
- **தெற்கு** - 09 அடி அகலப்பாதை நிலம்

மேற்குறித்த ஆதனத்தை பஞ்சரட்ணம் அருட்செல்வன் பெண் அஜிதா எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** (cs.54465) (N-1)

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் அலுமினிய Fitting வேலைத் தலத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

- ➤Casement Windows
- ➤100mm Sliding Door
- ➤Kitchen Cupboards

சுயமாக செய்யக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்
**மாதச் சம்பளம் 80,000/-**

(CR 41950) S-1

**077 879 6620**

## பெயர் மாற்றம்

J/153 பெரியவிளானில் வசித்துவரும் **அந்தோனி மேரி றோஸ்மெற்றலீன்** ஆகிய நான் எனது பெயரை **மரியதாஸ் மேரி மெற்றலீன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மரியதாஸ் மேரி மெற்றலீன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**மரியதாஸ் மேரி மெற்றலீன்**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை | : | பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் |
| விண்ணப்பதாரரின் பெயர் | : | பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம். |
| சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் | : | துரைராசா கைம்பெண் இராசேஸ்வரி |

முகவரி : செண்பற்றிமா டச்சு வீதி, வட்டாரம் - 04

வட்டாரம் 04, செண்பற்றிமா டச்சு வீதி ஆதன இல: 40 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பண்டத்தரிப்புக் கோவில்பற்று பண்டத்தரிப்பு இறை "கலட்டி நெடுங்கலட்டி நொாங்கனை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குழி 4.50 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் கீரிமலை பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும் தற்போது இங்கிலாந்தில் வசிப்பவருமாகிய துரைராசா கைம்பெண் இராசேஸ்வரி மரியா என்பவர் பிரசித்த நெத்தாரிசு இ.த.அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் 7747/13.11.2020 ம் உறுதி மூலம் பிரகடனம் செய்யப்பட்டு 2021.01.17ம் திகதிய 7787ம் இலக்க உறுதிமூலம் நன்கொடையாக பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் R.R.யோகதீபன் அவர்களால் வரையப்பட்ட 024ம் இலக்க 2020.07.26ம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 01 குளி 4.50 கொண்ட இவ் ஆதனத்தின் **எல்லைகள் பின்வருமாறு**

- **வடக்கு** - 10'அகலமான பொதுப்பாதை
- **கிழக்கு** - பற்றிமா வீதி
- **தெற்கு** - ஒழுங்கை
- **மேற்கு** - வயோதிபர் சங்கத்திற்குரிய ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்களுடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(cs.41949) (N-1)

## குருபூசை நிகழ்வு

*யாழ்., மார்ச் 21*

*தவத்திரு யோகர் சுவாமிகளின் 60ஆவது ஆண்டு குரு பூசையை முன்னிட்டு விசேட வழிபாடுகள், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் தேரடியிலும், அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தின் யோகர் சுவாமி அம்பலவாணர் மண்டபத்திலும் இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. (எ-66)*

## யாழில் குறையும் டெங்குத் தாக்கம்

யாழ்., மார்ச் 21

யாழ்.மாநகரப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் குறைவடைந்து வருகின்றது. இந்த மாதத்தில் இதுவரையான காலப் பகுதியில் 25 பேர் வரையிலேயே டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டெங்குத் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட குருநகர்ப் பிரதேசத்தில் கடந்த இரு நாள்களில் இருவரே டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடும் வறட்சியால் நுளம்புகளில் தாக்கம் குறைவடைந்து கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செயற்பட்டு மகிழ்வோம்

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, பாடசாலை மைதானத்தில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜ.தேவாஸ்வரன், தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இராசலட்சுமி மயில்வாகனசிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ப-159-20)



சுவிஸ் வலுவிழந்தோரைத் தாங்குவோம் அமைப்பினரால், மாந்தை கிழக்கிலுள்ள, பாலைப்பாணி பாடசாலையின் 10 மாணவர்களுக்கும், சிறாட்டிக்குளம் பாடசாலையின் 17 மாணவர்களுக்கும், கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ப-13)



பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 'தாலம்' பனம்பொருள் விற்பனை நிலையம் யாழ்.முற்றவெளியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் பங்கேற்று பனம்பொருள் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார். (ச-17)




யாழ். மாவட்டச்செயலகமும், சமூகசேவைகள் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டிகள், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன. (ப-9)



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் பிரதேசசெயலக மண்டபத்தில் பிரதேச செயலர் த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது . நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-9)



குப்பிழான் தெற்கு, வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்தப் பங்குனித் திங்கள் உற்சவத்தின் முதலாம் திங்கள் உற்சவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ப-66)

மாற்றுத்திறனாளிகளுக்கான உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில், சமூக சேவைகள் திணைக்களமும் முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் இணைந்து முன்னெடுத்த மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டி மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கரைதுறைப்பற்று பிரதேசசபை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ப-13)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய ரீதியிலான 18 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்டத் தொடரில், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, கொழும்பு மருதானை சென். ஜோசப் கல்லூரி அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (ம)

மருக்காரம்பளைப் பகுதியில் இரு பிள்ளைகளுடன் வசித்து வரும் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு, உதயம் கனடா அமைப்பின் ஊடாக சைக்கிளொன்று அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. திருமதி சரவணமுத்துவின் முதலாம் ஆண்டு நினைவாக, அவரது குடும்பத்தின் நிதி அனுசரணையில் இந்தச் சைக்கிள் வழங்கப்பட்டது. (ம-18)






வவுனியா மூன்று முறிப்பு சென்சு[illegible]ான் முன்பள்ளி மழலைகளின் சிறுவர் சந்தை நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. (ப-75)



வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு உத்தியோகத்தர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, ஜே/120 கோண்டாவில் தென்கிழக்குக் கிராம அலுவலர் மற்றும் கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில், கோண்டாவில் குட்டிச் சுட்டி முன்பள்ளி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ப-66)



முல்லைத்தீவு, விசுவமடு மகா வித்தியாலய வளாகத்தினுள் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை, வித்தியாலயத்தின் பழைய மாணவர்களால் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. பாடசாலை முதல்வர் ந.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப்பணிப்பாளர் சின்னையா பாஸ்கரன், நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திரப்பொறியியலாளர் ஜே.யூலியஸ் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ப-35)

வவுனியா வடக்குப் பிரதேசசபையின் கலாசார மண்டபத்தில், ஊழியர் நலன்புரிசங்கத்தின் ஏற்பாட்டில் 'உதிரம் கொடுத்து உயிரைக்காப்போம்' எனும் தொனிப் பொருளில் குருதிக் கொடை முகாமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ப-75)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறைமை திருத்தம் தாமதிப்புக்கு வழிகோலும்!

## பவ்ரல் அமைப்புச் சுட்டிக்காட்டு


கொழும்பு, மார்ச் 21

**இலங்கையின் தேர்தல் முறைமை திருத்த யோசனைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், தேர்தல் தாமதமாகும் அபாயம் உள்ளது என்று பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல் முறைமையில் திருத்தம் செய்வது தொடர்பான பிரேரணை அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை நாடாளுமன்றத் தேர்தல் முறைமையைக் கலப்பு விகிதாசார முறைக்கு கொண்டு செல்வதாகக் காணப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யப்படுவதாயின், அதில் ஓர் அங்கமாக வரும் எல்லை நிர்ணயத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். இல்லாவிட்டால் தேர்தல் முறைமை திருத்தப்பட்டு, சட்டம் இயற்றப்படும், எல்லை நிர்ணயம் முடிவடையாமல் போகலாம் - என்றார். (ச-இ)



## வீதித் திருத்தப் பணிகளை முழுமைப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 21

மாந்தை கிழக்கின் கரும்புள்ளியான் வீதி தொடக்கம் துணுக்காயின் மல்லாவி வீதி வரையான வீதிச் சீரமைப்புப் பணிகள் அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அதை முழுமைப்படுத்தவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் குறித்த புனரமைப்புவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 8 கிலோ மீற்றர் வரையான வீதியில் 4 கிலோ மீற்றர் வீதி வேலைகள் நிறைவு பெற்ற நிலையில் மிகுதி வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய்ப் பகுதி மக்கள் போக்குவரத்து நடவடிக்கை தொடர்பாக பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

வீதித் திருத்த வேலையைப் பொறுப்பெடுத்த திணைக்களத்தினரும் ஒப்பந்தகாரர்களும் வீதி திருத்த வேலையை நிறைவு செய்யவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)

## வீதி மின் விளக்குகளை பொருத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 21

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், தட்டயர்மலை கிராமத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதையடுத்து வீதிகளுக்கு மின்குமிழ் பொருத்தித்தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு - தட்டயர்மலை கிராமத்துக்குள் காட்டு யானைகள் அத்துமீறி நுழைந்து தொடர்ச்சியாக பல்வேறு அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. அத்துடன் கிராம வாசிகளுக்கு உயிரச்சுறுத்தலும் யானைகளால் ஏற்படுகின்றன. இதனால் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் யானைகளின் வருகையை அவதானிக்கு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஏதுவாக கிராமத்துக்குள் மின்விளக்குகள் பொருத்தித்தரவேண்டும் - என்றனர். (ம-13)

61.5 மில்லியன் டொலர் செலவில்

## காங்கேசன் துறைமுகம் விரைவில் அபிவிருத்தி!

### இந்தியத் தூதுவர் உறுதிமொழி

யாழ்ப்பாணம், மார்ச் 21

காங்கேசன்துறை துறைமுகத்தை ஆசியாவின் சிறந்த துறைமுகங்களில் ஒன்றாக மாற்றும் வகையில், அபிவிருத்திநடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு இந்திய அரசாங்கம் 61.5 மில்லியன் டொலரை வழங்கவுள்ளது.

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கைத் துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் இடையே அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த உறுதிமொழியை இந்தியத் தூதுவர் வழங்கியுள்ளார்.

"பெரிய கப்பல்கள் நங்கூரமிடக்கூடிய வகையில் காங்கேசன் துறைமுகம் 30 மீற்றர்கள் ஆழப்படுத்தப்படவுள்ளது. அத்துடன், இந்தியச் சுற்றுலாவிகளுக்காக 600 மில்லியன் டொலர் செலவில் புதிய முனையம் ஒன்றையும் துறைமுகத்தில் நிர்மாணிப்பதற்கு இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (அ-ம-6)



## ரணிலை சந்திக்கும் பஸில்

கொழும்பு, மார்ச் 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று இன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் பங்கேற்பதற்கு முன்னதாக ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனக்கட்சியின் நாடாளுமன்றக்குழுவை பஸில் ராஜபக்ச நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தினார். மஹிந்த ராஜபக்சவும் இக்கூட்டத்தில் பங்கேற்றார்.

முதலில் பொதுத்தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோருமாறு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர். மேலும் சிலர் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என வலியுறுத்தினர். அத்துடன் மே தினக் கூட்டத்தை பிரமாண்டமாக நடத்துவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு ஜனாதிபதியை, மொட்டுக் கட்சி ஸ்தாபகர் இன்று சந்திக்கவுள்ளார்.

தெற்கு அரசியலில் அடுத்து என்ன என்ற சர்ச்சைக்கு இச்சந்திப்பில் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-44)

கொழும்பில் இருந்தபடி

## ஆங்கிலத்தில் பேசுவதால் தமிழர் பிரச்சினை தீராது

### சுமந்திரனை வம்புக்கிழுத்த மஹிந்தானந்த

கொழும்பு, மார்ச் 21

கொழும்பில் இருந்துகொண்டு ஆங்கிலத்தில் பேசுவதன்மூலம் யாழ்ப்பாண மக்களின் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. கிளிநொச்சியில் இருந்து வந்த அப்பாவியிடம் தோற்றதால் சுமந்திரனுக்கு உள்ள கவலை புரிகின்றது என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவிக்கு நடந்த வாக்கு பற்றியும் கருத்து வெளியிட்டார். தமிழரசுக் கட்சியை அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என விளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் இருந்துவந்த அப்பாவிஒருவரிடம்தோற்றீர்கள்தானே? கொழும்பில் இருந்துகொண்டு யாழ்ப்பாண மக்களின் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. ஆங்கிலத்தில் கதைத்து வடக்கு மக்களின்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. தலைமைப்பதவி வேண்டுமெனில் வேட்டி அணிந்து சபைக்கு வாருங்கள்.

சுமந்திரனுக்கு உள்ள கவலை எனக்குப்புரிகின்றது. யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் செல்கின்றீர்கள், பெரிய ஹோட்டலில் தங்குகின்றீர்கள். இவ்வாறு செய்தால் யாழ். மக்களின்வாக்குகளைப் பெறமுடியாது. நீங்கள் (சுமந்திரன்) எனது பாடசாலை நண்பர்தானே, நீங்கள் தலைமைப்பதவிக்கு வந்தால் நானும் மகிழ்ச்சியடைவேன். நீங்கள் எனக்குச் சொல்லி இருந்தால் ரி.என்.ஏ.யில் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) நான் வாக்குகளைப் பெற்றுகொடுத்திருப்பேன். உங்களைவிட எனக்கு கூட்டமைப்பில் அதிக செல்வாக்கு பெறமுடியும் - என்றார். (அ-எ-44)

## 32 மாணவர்கள்...

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான முதல் காலாண்டுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் எஸ்.எஸ்.முரளிதரன் தலைமையில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 32 மாணவர்கள் கல்விச் செயற்பாட்டிலிருந்து இடைவிலகிய நிலையில் அவர்களில் 29 பேர் மீளிணைக்கப்பட்டனர்.

மாணவர்களின் கல்வி இடைவிலகலுக்கு குடும்பப் பொருளாதாரம், வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை உள்ளிட்டவையே அதிக தாக்கம் செலுத்துகின்றன என்றும் உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது பாடசாலைக் கல்வி, பாதுகாப்புத் தொடர்பில் தொடர் அதிக கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் இதுகுறித்துப் பெற்றோருக்கு விழிப்புணர்வை வழங்கவேண்டும் என்றும் பதில் மாவட்டச் செயலர் அறிவுறுத்தினார். (அ-ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்களிப்பில்...

தற்போது தேர்தல் மூலம் 196 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். 29 உறுப்பினர்கள் மாவட்ட 'போனஸ்' ஆசனம் என்ற ரீதியிலும் தேசியப்பட்டியல் மூலமும் நியமிக்கப்படுகின்றனர்.

தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 160 ஆகக் குறைத்து நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கையை 65 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கான திருத்தச்சட்டவரைவு

சிறைச்சாலைகள், நீதி மற்றும் அரசமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கென பிரதமர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தச் சட்டவரைவு கட்சித்தலைவர்களின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் உரிய தரப்புகளின் ஆலோசனைகளைப் பெற்ற பின்னர் பூர்வாங்க நவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நியமன நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 225 நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இருக்குமென்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இவ்வாறு நியமன எம்.பி.க்க ளின் எண்ணிக்கையை அதிகரிப்பது சிறுபான்மைக் கட்சிகளில் இருந்து தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகின்றது. (அ-6)

## நீதிமன்றை...

முதலாம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி மற்றும் கொன்ஸ்டபிள் ஒருவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவு விசாரணை நடத்திவரும் காணி மோசடி தொடர்பான வழக்கொன்றில் பிரபல சட்டத்தரணி ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த ஜனவரி மாதம் முன்பிணை பெற்றிருந்தார். அந்த முன்பிணைக் கட்டளையில் முகத்தோற்றமளவில் மனுதாரர் மீது அவர் சான்றுப்படுத்தியதாகக் கூறப்படும் உறுதி நிறைவேற்றங்களில், ஏதாவது குற்றப் பொறுப்புடைமை காணப்படுவதாகத் திருப்தியடையவில்லை என்று மன்று குறிப்பிட்டிருந்தது.

இந்தநிலையில், சட்டத்தரணி கு.குருபரன் ஊடாகச் சட்டத்தரணி தற்போது தாக்கல் செய்துள்ள மனுவில்,

கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதியிட்டு மேலதிக அறிக்கை ஒன்றைப் பொலிஸார் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மனுதாரர் தான் செய்த குற்றத்தை உணர்ந்து தன்னைப் பொலிஸார் எந்தநேரத்திலும் கைது செய்யலாம் என்ற அச்சத்தில் எதிர்நோக்கிய பிணை விண்ணப்பத்தைச் செய்தார் என்றும், குறித்த வழக்கில் மனுதாரரைக் கைது செய்யவேண்டாம் என்று கட்டளையிடப்பட்டிருப்பதுடன், மனுதாரர் வழக்கில் சந்தேகநபராக முற்படுத்தவேண்டிய நபர் என்றும் கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மனுதாரர் மன்றில் சமுகமளிக்கும் வகையில் அறிவித்தல் ஒன்றை வழங்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த வாசகங்களைக் கொண்ட விண்ணப்பமானது நீதிமன்றம் ஆக்கப்பட்ட கட்டளையை வேண்டுமென்றே தவறாக முன்னிலைப்படுத்திச் செய்யப்பட்ட விண்ணப்பம் என்பதுடன், நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் கீழ்மைப்படுத்துவதாகவும்,

நீதிமன்றத்தின் கௌரவத்தைக் கீழ்மைப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனு விசாரணைக்காக எதிர்வரும் முதலாம் திகதி நீதிமன்றில் எடுக்கப்படவுள்ளது. (அ-எ-26)

## அரிசிக்...

கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் இருந்து தலா 25 கிலோ நிறையுடைய ஆயிரத்து 200 மூடை அரிசியை காலியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று கொள்வனவு செய்துள்ளது. இந்தக் கொள்வனவு நடவடிக்கை காலியிலுள்ள மொத்த விற்பனை நிலையத்தின் முகாமையாளர் என்று கூறிக்கொண்ட ஒருவர் ஊடாகவே நடந்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள அரிசி ஆலையில் இருந்து ஏற்றப்பட்ட அரிசி மூடைகள் காலியில் உள்ள களஞ்சியம் ஒன்றில் இறக்கப்பட்டு, அரிசி மூடைகளைக் கொண்டுசென்ற சாரதி, அவற்றுக்கான பணத்தைக் கேட்டுள்ளார். ஆனால் அரிசி மூடைகளுக்கான பணம் இடைத்தரகரிடம் (முகாமையாளர் என அறிமுகப்படுத்தியவர்) வழங்கப்பட்டுவிட்டது என்று காலி மொத்த விற்பனை நிலைய உரிமையாளர் தெரிவித்துள்ளார். அவர் தங்களது முகாமையாளர் இல்லை, இடைத்தரகர் மட்டுமே, தங்களுக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அந்த மொத்த விற்பனை நிலைய உரிமையாளர் கைவிரித்துள்ளார்.

இடைத்தரகரைத் தொடர்புகொள்ள முடியாத நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள அரிசி ஆலை முகாமையாளர் இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தது. காலியில் அரிசி மூடைகள் இறக்கப்பட்ட இடத்துக்குச் சென்ற பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்தது. அவ்வாறு அரிசி மூடைகள் இறக்கப்படவில்லை என்று ஆரம்பத்தில் அங்கிருந்தவர்கள் மறுத்துள்ளனர். ஆயினும் பொலிஸார் அங்குள்ள களஞ்சியசாலையில் சோதனை முன்னெடுத்தபோது, அரிசி மூடைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன. அதையடுத்து மொத்த விற்பனை நிலைய உரிமையாளர் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு நீதிமன்றில் இரு தினங்களுக்கு முன்னர் முற்படுத்தப்பட்டார். அவரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

மீட்கப்பட்ட அரிசி மூடைகளை யாழ்ப்பாணத்தில் உள்ள அரிசி ஆலை உரிமையாளரிடம் நீதிமன்றம் ஊடாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## தமிழ்...

றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வழிபாட்டுக்குச் சென்றவர்களை தொல்லியல்திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்து வழக்குத் தாக்கல் செய்தனர் எனக் கூறி, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கைது சரியாக இருக்கலாம், பிழையாக இருக்கலாம். ஆனால் சபைக்குள் செயற்படவேண்டிய விதம் உள்ளது. தமது இருக்கையில் இருந்து கேள்வி எழுப்பலாம்.

எதிர்க்கட்சித் தலைவரும் அந்தக் கூட்டத்துக்கு வந்து, சபாபீடத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபரை அழைத்து பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று கூறினார். நாடாளுமன்றத்தில் அவ்வாறு செய்யமுடியாது. நாடாளுமன்றத்துக்கெனச் சட்ட திட்டம் உள்ளது.

ஏதேனும் பிரச்சினை இருந்தால் அது பற்றி விசாரணை நடத்தவேண்டும் என்று தமது இருக்கைக்கு முன்னால் இருந்து கோரலாம். தற்போதைய சபாநாயகர் பக்கச்சார்பற்ற வகையில் செயற்படுகின்றார். அவர் பக்கம் தவறு இல்லை. எதிர்க்கட்சித் தலைவர்தான் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றார் - என்றார். (அ-எ-44)

## வடக்கு...

லில் சஜித் பிரேமதாஸ 75 இலட்சம் வாக்குகளைப் பெறுவார் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு அலை இருக்கின்றது எனக் கூறப்பட்டாலும் தற்போதுள்ள வாக்குவங்கியைவிட சற்றுக் கூடுதல் வாக்குகளே அந்தக்கட்சிக்குக் கிடைக்கும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் வாக்குவங்கி 10 விகிதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

வடக்கிலும் எமக்கே ஆதரவு உள்ளது. இனவாதக் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். எமது அணியில் இனவாதிகள் இல்லை. சஜித் இனவாதமற்ற தலைவர். அனைத்து இனத்தவர்களும் அங்கம்வகிக்கக்கூடிய கட்சி எமது கட்சிதான். எனவே வடக்கு மக்கள் எமக்கே ஆதரவளிப்பர். இதனால் சஜித் 75 இலட்சத்துக்கும் அதிக வாக்குகளைப் பெறுவார். அதேவேளை, அடுத்து என்ன தேர்தல் நடத்தப்பட்டாலும் கூட்டணியாக எதிர்கொள்வதற்கு செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது" - என்றார். (அ-44)

## சந்தேகநபர்கள்...

சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் காரைநகரில் இருந்து வந்த, 23 வயதான த.பவிதரன் என்ற இளைஞரையும், அவரது மனைவியையும் பொன்னாலையில் உள்ள கடற்படைச் சோதனைச் சாவடிக்கு முன்பாக கடத்திச் சென்ற கும்பல், இளைஞரைக் கொடூரமாகக் கொலை செய்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் இதுவரை 6 பேரைக் கைது செய்துள்ளனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கின் 5 ஆவது மற்றும் 6 ஆவது சந்தேகநபர்கள் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். கொல்லப்பட்ட இளைஞனின் மனைவி அவர்களை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினார்.

விசாரணைகளின் பின்னர் வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது. சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (அ-எ-26)

## ஜனாதிபதித்...

இருந்து அறியமுடிகின்றது. ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்பதால் அதற்குத் தயாராகுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரியப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய கூட்டணி அமைப்பதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி துரிதப்படுத்தியுள்ளது. வஜிர அபேவர்த்தன, ரவி கருணாநாயக்க ஆகியோர் இதற்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அறியமுடிகின்றது. அத்துடன், வடக்கு - கிழக்கை ஒருங்கிணைக்கும் பொறுப்பு ரவி கருணாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது. இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துவதற்கே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நகர்வுகளை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-44)

## கனடாவுக்கு...

வெளிநாடு அனுப்பாமல் அந்தப் பெண் கடந்த மூன்று மாதங்களாக 'டிமிக்கி' கொடுத்து வந்தார். இதனால் ஏமாற்றமடைந்த யாழ். இளைஞர், இதுகுறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து, குறித்த மோசடிப் பெண்ணை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு, பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர். மன்றில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட பெண், முதற்கட்டமாக 4 இலட்சம் ரூபாவையும் பாதிக்கப்பட்ட இளைஞருக்கு மீளச்செலுத்தினார். குறித்த பெண்ணை 6 இலட்சம் ரூபா 2 ஆட்பிணையில் செல்ல நீதிவான், ஏ.ஆனந்தராஜா அனுமதியளித்தார். (அ-23)

## கடலில்...

இளவாலையைச் சேர்ந்த தே.ஜூட் (வயது -37), நாவற்குழியைச் சேர்ந்த சி.திபிசன் (வயது-21) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதி ஒன்றில் உரிமையாளருடன், அங்கு பணியாற்றும் இருவரும் கடலுக்கு நீராடச் சென்றிருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது ஒருவர் நீரில் மூழ்கியதை அடுத்து, அவரை மீட்க முயன்றபோதே மற்றையவரும் கடலில் மூழ்கியுள்ளார். பொதுமக்களின் உதவியுடன் இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-26)

## புறக்கணிப்பால்...

பட்டது" என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார். (அ-எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 கோடி ரூபா பெறுமதியான தங்கம் கடத்தியோர் கைது!

கொழும்பு, மார்ச் 21

இலங்கைக்குச் சட்டவிரோதமான முறையில் தங்க நகைகளைக் கொண்டு வந்த வர்த்தகர்கள் இருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கை சுங்கப் பிரிவினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட தங்கத்தின் பெறுமதி 12 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. பயணப்பொதிகளில் மறைத்து அவற்றை எடுத்து வந்த நிலையில் சுங்கப் பிரிவினரால் அவை மீட்கப்பட்டுள்ளன. (ச-இ)

## காணி விற்பனைக்கு

755 மாவிட்டபுரம் வீதியில்
14 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. சுற்றி மதில் கட்டியது.

**075 944 4601**

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாணத்துறைக்கு
வேலையாட்கள் தேவை.

- மேசன் (Mason)
- கூலி (Labourer)
- மின் இணைப்பாளர் (Electrician)

தொடர்புகளுக்கு:-
077 966 9498, 076 7600403


## காணி விற்பனைக்கு உண்டு

### நெல்லியடி நகரத்தில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை நான்கரை இலட்சம் ரூபாய் மட்டும் (450 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
தொடர்பு: 071 173 3911 / 076 853 5022

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.07.1948

மறைவு:
13.04.2022

### சபா. தியாகராஜா

(ஓய்வு பெற்ற பிராந்திய கணக்காளர் - இ.போ.ச)

திதி - துவாதசி

அப்பாவை இழந்து ஆண்டுகள் இரண்டு
அன்பை அள்ளிக் கொடுத்து
அரவணைப்பில் ஆர்ப்பரித்து
கம்பீர நடையில் புன்னகையோடு வலம் வந்து
குடும்பத்தை வழி நடத்தி
ஊருக்கெல்லாம் சேவை செய்து
யாருக்கும் கெடுதலின்றி
வாழ்ந்து போனீரே...
உங்களை இழந்து தவிக்கும் எங்களுக்கு
உங்கள் வாழ்வியலே வழிகாட்டி
நல்லூரான் காலடியில்
நிம்மதியாய் உறங்குங்கள் அப்பா

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/54448) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
19.06.1939

மறைவு:
19.03.2024

### கனகம்மா நல்லையா

செட்டிவளவு ஒழுங்கை இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா நல்லையா அவர்கள் கடந்த (19-03-2024) செவ்வாய்க்கிழமை அன்று இணுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா நல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அமரசிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா (வளையம்) - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சத்தியவதி (Rtd.Principal மஸ்கெலியா), விஜியதர்சினி (லண்டன்), ஜனனி (உள்ளூராட்சி உதவியாளர்-வலி. வடக்கு பிரதேச சபை), திருமுருகன் (லண்டன்), தெய்வீகன் (லண்டன்), குணாளினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வெலிங்ரன் (Rtd. Chief Clerk மஸ்கெலியா), ஜோதிநாதன் (லண்டன்), ஆனந்ததாண்டேஸ்வரன் (Sales Executive ALCOA Pvt. Ltd), சுமாலினி (லண்டன்), ஜெயந்தி (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான லீலாவதி, சுப்பிரமணியம், குமரதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணேஸ்வரன், விஜயகௌரி, செல்லம்மா, யோகம்மா, சண்முகராசா, தம்பிநாயகம் மற்றும் மைத்தினா கணேஸ்வரி (லண்டன்), ஞானேஸ்வரி (லண்டன்), இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜீட், ஜட்ஜ், லகரி, பத்மாசன், லூடி, தனோசன், கம்சவி, தாமிரன், தருணிகா, தனன், தயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தானியா, ஜேம்ஸ், மயிலோன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-03-2024) வியாழக்கிழமை 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 991 2181
077 576 1950

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(CS/54483) J

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.